பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
28-08-2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் மூலம் இதுவரை 56 கோடிக்கும் கூடுதலான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2) மத்திய அரசின் நிதியுதவிகளை இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி பயனாளிகளுக்கு கொண்டு சேர்ப்பதை இந்த திட்டம் உறுதி செய்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) பருத்தி இறக்குமதிக்கான சுங்கவரி ரத்து சலுகை நடப்பாண்டு இறுதிவரை நீட்டிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

4) ரயில்வே வாரிய தலைவர் திரு. சதிஷ்குமாரின் பதவிக்காலம் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

5) காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shah Hussain தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<**

பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டம், 11 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

அனைவருக்கும் வங்கி சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான தேசிய இயக்கமாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ், இதுவரை 56 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதில் 67 சதவீத வங்கிக் கணக்குகள் ஊரகப் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் மகளிர் மட்டும் 56 சதவீத வங்கிக் கணக்குகளை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வங்கிக் கணக்குகளில் 2 லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாய் உள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

உலகிற்கே முன்னுதாரணமாக இந்த திட்டம் திகழ்வதாக நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

*இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், கடந்த நிதியாண்டில் மட்டும் 6 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிதியுதவிகள், பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.*

*இந்த திட்டம் தொடர்பாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், 11 ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைத்த இந்த திட்டம், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய அரசின் நிதி சார்ந்த பலன்களை இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி பயனாளிகளுக்கு கொண்டு சேர்ப்பதை இந்த திட்டம் உறுதி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த திட்டத்தின் பயனாளிகளில் 56 சதவீதம் பேர் பெண்கள் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.*

*ஊரக மற்றும் சிறு நகர பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த திட்டத்தின் மூலம் அதிக அளவில் பயனடைந்திருப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*இதற்கிடையே, மத்திய அரசின் நிதியுதவிகளை எளிதாக பெறுவதற்கு இந்த திட்டம் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – பயனாளிகள் 78 செகண்ட்ஸ்)*

**>>>>>><<<<<<**

*பருத்தி மீதான இறக்குமதி வரி ரத்து சலுகையை, நடப்பாண்டு இறுதி வரை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.*

*ஜவுளித் துறையினரின் வேண்டுகோளை ஏற்று இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

**>>>>>><<<<<<**

*உள்நாட்டு உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன் மூலம் கிராமங்கள் வலிமையடையும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தொழில்களின் வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.*

*இதன்மூலம் இந்தியா சுயசார்பிற்கான இலக்கினை எட்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

**>>>>>><<<<<<**

ரயில்வே வாரிய தலைவர் திரு. சதிஷ்குமாரின் பதவிக்காலம் மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**>>>>>><<<<<<**

அமெரிக்க அமைச்சரவைக் கூட்டம், அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரமப் தலைமையில் நடைபெற்றது.

மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பங்கேற்க ஊடகத்தினரும் அனுமதிக்கப்பட்டனர்.

அமைச்சரவை கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்களை நேரடியாக அறிந்து கொள்ளும் வகையில் ஊடகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அந்நாட்டு ரிசர்வ் வங்கி கவர்னர் Lisa Cook தம்மை பதவிநீக்கம் செய்வதற்கான அதிகாரம் அதிபருக்கு இல்லை என்று தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

ஜம்மு கஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்

பந்திப்புரா மாவட்டத்தை ஒட்டிய எல்லைப் பகுதியில் ஊடுருவல் முயற்சி நடைபெறவுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தினர்.

அப்போது இரண்டு தீவிரவாதிகள் ஊடுருவ முயன்றதாகவும், அவர்களை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றதாகவும் ராணுவம் தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<<**

மஹாராஷ்ட்ராவில் கட்டிடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.

Palghar மாவட்டத்திற்கு உட்பட்ட விரார் பகுதியில் அனுமதியின்றி கட்டப்பட்ட 4 மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

**>>>>>><<<<<<**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

சத்திஷ்கட், கர்நாடகா. மஹாராஷ்ட்ரா, உத்ராகண்ட் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஒடிசா, மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், சிக்கிம், ஜார்க்கண்ட் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.*

*தில்லி மற்றும் புறநகர் பகுதிகளிலும் அடுத்த 5 தினங்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*இதற்கிடையே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாபில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*ராணுவம், விமானப்படை, எல்லைப் பாதுகாப்புப் படை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*மழை வெள்ள பாதிப்புகள் காரணமாக 65 ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.*

*பதான்கோட், லூதியானா. ஜலந்தர். அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் ரயில் பயணிகளுக்கு உதவுவதற்காக சிறப்பு மைங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.*

*அம்மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் சிங் மான், குர்தாஸ்பூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார்.*

**>>>>>><<<<<<**

*காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shah Hussain தங்கப்பதக்கம் வென்றார்.*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 88 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

**>>>>>><<<<<<**

*Sinquefield கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*அமெரிக்காவில் நடைபெற்ற இப்போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றதன் மூலம் கிராண்ட் செஸ் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளார்.*

**>>>>>><<<<<<**

*உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் நீரஜ் சோப்ரா, முரளி ஸ்ரீஷங்கர் உட்பட 18 பேர் தகுதி பெற்றுள்ளனர்.*

**>>>>>><<<<<<**

*சர்வதேச தரவரிசை பட்டியலில் பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அவர்கள் இப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.*

*டோக்கியோவில் நடைபெறவுள்ள இப்போட்டி, அடுத்த மாதம் 13ஆம் தேதி தொடங்கி 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

**>>>>>><<<<<<**

*ஆசிய கோப்பை சைக்கிளிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Ronaldo Laitonjam அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் தகுதி சுற்று ஆட்டங்களில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர், அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

**>>>>>><<<<<<**

*புனே சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Divyansh Rawat – Dianka Waldia இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-18, 18-21, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Nagi Yoshitsugu – Yuzu Ueno இணையை வென்றது.*

**>>>>>><<<<<<**

*அஸ்தானாவில் நடைபெற்ற சர்வதேச Boccia சேலஞ்சர் போட்டியில் இந்தியா 3 வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

**>>>>>><<<<<<**

*23 வயதுக்குட்பட்டோருக்கான இந்தியா – ஈராக் இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி இன்று கோலாலம்பூரில் நடைபெறுகிறது.*

**>>>>>>END<<<<<<**